sky தமிழ் NEWS

# துணிந்தெழு

வரலாறு படைக்க இருக்கும் வைர மங்கையர்

skytamil.lk@gmail.com
www.news.skymediasl.com

FEBRUARY 15, 2021 MONDAY வார இதழ் @skytamil.lk ISSUE:03

துணிந்தெழு கவிதைகள்

## புதிய வாட்ஸ்அப் வசதி எப்படிச் செயல்படுகிறது?

மஸ்கெலியாவிலுள்ள
## ஒரு நீர்த்தேக்கத்தில் இரண்டு நீர்வீழ்ச்சிகள்

முஸ்பூர் சிங்க்ஹோல்
## கத்தாரில்
அமைந்துள்ள இயற்கை அதிசயங்களில் ஒன்றாகும்



## மரீனா இல்யாஸ் ஷாபி
அவர்களுடனான நேர்காணல்

# நான் கவியல்ல

மரமே !!!

உன்னைத் தாவிக்
கட்டிக் கொ(ல்ல)ள்ள

உன் கிளைகளை ஒடித்து எறிந்து
உன்னை நிர்க்கதியாக்க

உன் கனிகளை கடித்துச் சுவைத்து
உன்னைக் காயப்படுத்த

உன் இலைகளை புசித்து அழித்து உன்
அழகினைப் போக்க

உன்னை அசைத்துப் பிடுங்கி
ஆணிவேரைப் பிரித்தெடுக்க

நான் கவியல்ல

உன்னை அணுவணுவாக
இரசிக்க

உன் பூவின் வண்ணத்தை விதவிதமாக
வடித்து

உன் பொழிலை நயந்து
உன் பயனை சுவாசித்து

உன் வனப்பை பூசித்து
உன் எழிலை நேசித்து

உன் நிழலில் இளைப்பாற நினைக்கும்

மனிதத்தின் தோற்றுவாயான

ஒரு பேனா

**கவிதாயினி இராணி பௌசியா**
**பொலன்னறுவை**





# உச்சிமீது வானிடிந்தபோதும் அச்சமில்லை

என் சிரிப்பின்
அர்த்தம் கூட தெரியாத
சில்லறைகளுக்கெல்லாம்
எங்கே என் சிந்தனைகளின்
அர்த்தம் புரியப்போகிறது
விண்ணில் இருக்கும்
வெண்ணிலா விழாமல்
இருக்க
மண்ணில் இருக்கும்
பெண்ணிலா நான்
வீழ்வேனா என்னை வீழ்த்த
நினைத்து நீங்கள் வீழ்ந்து
விடாதீர்கள்
வீழ்வதற்கு நான் வீணாக
பிறக்கவில்லை நாடக
உலகில் நானும் நாயகியே



கவிப்புயல் ஸஹ்ரா
மாத்தளை ஆமினா தேசிய பாடசாலை

உன்னோடு மட்டும்
ஒரு நாள் வேண்டும்,
வேறெங்கும் செல்லாமல்
உன்னருகில் அமர்ந்து
நாளும் நடந்தேறும்
இன்னல்களை மறந்து
உன்மடிமீது சாய்ந்து
துயில்கொள்ள வேண்டும்.
அந்நாள் விடியாத
இரவாக இருக்க
வேண்டும்.

என்தோள்தொட்டு தூக்கி
உன்தோள்மீது சாய்த்து
கைவிரல்கொண்டு
தலைமுடிகோதி
என்செவி தனில்
நீ கூறும்
அன்பு வார்த்தைகள்
வேண்டும்...

இனியும் எது
வந்தாலும்
வந்தவை அதன்வழி
செல்லும்வரை உடன்
நானிருப்பேன்
என்மடி தந்து

நீ கண்மூடி
துயில்கொள்ள உன்னுடன்
எப்பொழுதும்
நானிருப்பேன் என்று
நீ கூறும்
வார்த்தைகள்
வேண்டுமடி எனக்கு.



K.VA
இந்தியா

# கிராமத்துக் காதல்

முறுக்குமீசை முரட்டு மச்சானே...
முப்பொழுதும் நினைக்க
வெச்சானே...
பேச்சி மக என்ன
பேசிப் பேசி சூடேத்தி
பேச்சில்லாம கிறங்க வச்சானே....

கறுத்த தேகத்தோடு
கரும்பு காட்டுக்குள்ள
முரட்டு காலையாட்டும்
மும்முரமா வேலை செஞ்சி
பேச்சி மக பேராசையிலே
ஏங்கி ஏங்கி தவிக்க வச்சானே...
காதலயும் புரிய வச்சானே....

அழுக்கு ஆடையிலே
அன்பா நீ பாக்கயிலே
அப்படியே சொக்குதய்யா...
அனச்சி முத்தம் தர
தோணுதய்யா....

வியர்வை வாசத்திலே
வியப்போடு நீ பாக்கயிலே
வித்தியாசமா தெரியிர மச்சான்
ஏ இச்ச எல்லாம் தூண்டுர
மச்சான்....

பச்ச தாவணிய கட்டிக்கிட்டு...
கஞ்சிக்கூடைய தூக்கிக்கிட்டு...
கழனிப் பக்கம் போகயிலே...
கரும்புக் காட்டுக்குள்ள...
கலப்புக்கட்டும் மச்சானே
நினைச்சிக்கிட்டே நா வாரேன்...

தூரத்துல நா வருகையில
தூதாக உன் நினப்பு
தொடர்கையிலே
தொட்டணைக்க துடிக்கையிலே
தொலைதூரமும் தொடும் தூரமா
தோணுதய்யா...
உன்ன நினச்சாலே உள்ளத்தில்
தேனூருதய்யா....

**கவியருவி றிபான்**
**அக்கரைப்பற்று**





# எரிந்தவை உடல்கள் அல்ல உயிர்கள்

ஓ.....
நான் ஓர் ஆத்மா
ஒரு தாயின்
கருவறையில்
இருந்து பிறந்தவன்
நான்
எனது சத்தம்
இந்த எரியூட்டப்பட்ட
மண்டலத்தில்
எரிக்கப்பட்டு விட்டது
ஏனோ தெரியவில்லை
எனக்கும் அது புரியவில்லை
என்
சுவாச நரம்புகள்
நசுக்கப்பட்டு
நான்
எரிந்து சாம்பலாக
மறைந்து விட்டேன்
காரணங்கள் இல்லாமலும்
கையெழுத்து போடாமலும்
நான்
வீசப்பட்டேன்
ஏன் எதற்கு என்னை
எரித்தார்கள்
விசம் கொண்ட
விசக் கிருமிகளால்
விஸ்வரூபம் எடுத்து

மீண்டும் வருவேன்
என்பதற்காகவா
நாகரிகம்
கொண்ட சமூகத்தில்
நாங்கள் நசுக்கப்படுவது
ஏன்
நம்பிக்கை கொண்டவர்கள்
நளினம் அடைவது
ஏன்
யாரோ ஒருவனாலா..?
பாராளுமன்றம் ஏறியும்
பலன் எதுவும் இல்லையா
பரிதாபம்
இன்னும் வர வில்லையா
பார்ப்பவர் எவரும் இல்லையா
இங்கு புகைக்குள்
காற்றோடு கரைந்து போவது
எங்களது
ஆன்மா
மண் தந்த உடலை
மண்ணே சுவைக்க விட்டு விடுங்கள்
எரித்து ஏளனம் செய்து விடாதீர்கள்
பரவாயில்லை எரித்தாலும்
இப்றாஹிம் நபி அவர்கள் கண்ட
அந்த குளிர்ச்சி

நெருப்புக்குள் இருக்காதா
ஏன்
என்றால்
கலீமா ஒன்றே போதும்
நாங்கள் சுவர்க்கம் செல்ல
மறந்து விடாதீர்கள்
இங்கு
எரிக்கப்பட்டது
எங்களது
உடல்கள் அல்ல உயிர்கள்
இருந்தும் நான் ஓர் ஆன்மா....



வலியைச் சுமந்த வரிகளாக நான்
கவிஞர் சாந்திமுனையூர் சியான்



பெண்களால் தான் ஒரு குழந்தையை வயிற்றில் சுமந்து தாயாக முடியும் என்பதில்லை, மாறாக ஆண்களும் மனைவியை மனதில் சுமந்து வாழ்வில் பல இடங்களில் தாயுமானவனாய் அவதரிக்கிறார்கள் அவர்களிடமும் ஓர் தாய்மை உண்டு ஆண்களும் பாராட்டப்பட வேண்டியவர்களே.... !!!


**சிறுகவி மு.மாஜிதா**

# புதிய வாட்ஸ்அப் வசதி எப்படிச் செயல்படுகிறது? 7 நாட்களுக்குப் பிறகு தானாக அழிந்துவிடும் Messages




ஜெ.எம்.பாஸித் – Dip in IT

இந்த இடத்தைத் தக்கவைக்கப் பயனாளர்களுக்கு பயனுள்ள புதிய வசதிகளைத் தொடர்ந்து அப்டேட்கள் வழி அறிமுகம் செய்துகொண்டே வருகிறது. இரண்டு, மூன்று வருடங்களுக்கு முன்னுள்ள வாட்ஸ்அப்பை இப்போது பார்த்தால் அடையாளமே தெரியாத அளவுக்கு வசதிகளை மேம்படுத்தி வருகிறது வாட்ஸ்அப். டார்க் மோடு, அனிமேடட் ஸ்டிக்கர்ஸ் எனச் சமீபத்தில் கூட நிறைய வசதிகள் அறிமுகம் செய்யப்பட்டிருந்தன. இந்த வரிசையில் இப்போது 'Disappearing Messages' என்ற வசதி அறிமுகம் செய்யப்படுள்ளது.




இதைப் பயன்படுத்துவதன் மூலம் நீங்கள் அனுப்பும் Messages ஏழு நாட்களுக்குப் பிறகு தானாக அழிந்துவிடும். நீங்கள் அனுப்பும் எந்த Messages ஏழு நாட்களுக்கு மேல் வாட்ஸ்அப்பில் இருக்காது என்ற நிம்மதியுடன் உங்களால் Chat செய்யமுடியும்.




– இந்த வசதி Messages மட்டுமல்லாமல் போட்டோ, வீடியோ என அனைத்தையுமே ஏழு நாட்களுக்குப் பிறகு அழித்துவிடும். அதனால் முக்கியமானவற்றை அதற்கு முன்பே பிரதி எடுத்து வைத்துக்கொள்ள வேண்டும்.

– ஒரு வேளை ஒரு பயனாளர் ஏழு நாட்களுக்கு Messages பார்க்கவே இல்லையென்றாலும் அவை அழிந்துவிடும்.

– ஏதாவது ஒரு Messagesக்கு இப்போது Reply செய்யப்பட்டிருந்தால் அது அழிக்கப்பட்டாலும் இந்த Reply Messages பழைய Messagesம் காட்டப்படும்.

– இந்த வசதியைப் பயன்படுத்துவதன் மூலம் இதற்கு முன்பு உள்ள எந்த Messagesம் அழியாது.





# மஸ்கெலியாவிலுள்ள ஒரு நீர்த்தேக்கத்தில் இரண்டு நீர்வீழ்ச்சிகள்



# மஸ்கெலியாவிலுள்ள ஒரு நீர்த்தேக்கத்தில் இரண்டு நீர்வீழ்ச்சிகள்

தனித்துவமான இயற்கை அழகு நம் இலங்கையில் நிச்சயமாக சென்று பாருங்கள் ஒரு நீர்த்தேக்கத்தில் இரண்டு நீர்வீழ்ச்சிகள் ஒன்றாக வருகின்றன

## GARTMORE FALLS & MORAY FALLS

கேட்மோர் மற்றும் முர்ரே நீர்வீழ்ச்சி

**இடம்:மஸ்கெலியா**

இந்த பகுதி அதன் தனித்துவமான இயற்கை அழகின் காரணமாக உள்ளூர் மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் கவனத்தை ஈர்த்துள்ளது.

அந்த அழகின் மிக முக்கியமான அம்சங்களில் ஒன்று கம்பீரமான "கேட்மோர் மற்றும் முர்ரே" நீர்வீழ்ச்சிகள் ஆகும் கொழும்பிலிருந்து சுமார் 140 கி.மீ தூரத்தில் அமைந்துள்ள இந்த நீர்வீழ்ச்சியை அடைய எளிதான வழி கொழும்பிலிருந்து (Colombo - Maskeliya -hatton) மஸ்கெலியா ஹட்டன் சாலை வழியாகும்.

நீங்கள் மஸ்கெலியாவுக்கு வந்து அங்கிருந்து உங்கள் வழியைக் கண்டுபிடிக்க முடியவில்லை என்றால், ஒருவரிடம் கேளுங்கள்,
சுமார் 45 அடி உயரத்தில் இருந்து, வெவ்வேறு கோணங்களில் இருந்து நீர்வீழ்ச்சியின் காட்சியை நீங்கள் ரசிக்கலாம், மலைக்காலத்தில் கண்கவர் காட்சிகளை உருவாக்குகிறது.

ஆனால் ஒரே கோணத்தில் இருந்து ஜோடி நீர்வீழ்ச்சிகளின் அழகை அனுபவிக்க, நீங்கள் படகில் செல்வதன் மூலம் ஏரியின் நடுவில் நின்று பார்வையிட முடியும்.

கேட்மோர் (GARTMORE) நீர்வீழ்ச்சி **"ஸ்ரீ பாதா நீர்வீழ்ச்சி"** என்றும் அழைக்கப்படுகிறது, ஏனெனில் இது ஸ்ரீ பாத மலையின் உச்சியில் அமைந்துள்ளது.





இந்த நீர்வீழ்ச்சியைக் காண நீங்கள் மஸ்கெலியாவில் இருந்து கேட்மோர் GARTMORE தோட்டத்திற்கு பயணிக்க வேண்டும்.

மேலும் மஸ்கெலிய இருந்து பொதுப் போக்குவரத்து சேவைகள் செயலில் இருந்தாலும் மோட்டார் சைக்கிள் போன்ற தனியார் வாகனத்தில் பயணம் செய்தால் உங்கள் பயணம் எளிதாக இருக்கும்.

தேயிலை தோட்டங்களுக்கு நடுவில் உள்ள சாலை சற்று வழுக்கும் மற்றும் செங்குத்துப்பக்கம் பக்கத்தில் உள்ளது, எனவே பயணம் செய்வதற்கு முன் கவனமாக இருங்கள். கேட்மோர் GARTMORE பார்வையிட பார்க்கும் சாவடிகள் அமைக்கப்பட்டிருந்தாலும், பல சுற்றுலா பயணிகள் நீர்வீழ்ச்சியை அதன் உண்மையான அழகை அனுபவிக்க ஆர்வமாக உள்ளனர்.

தேயிலைத் தோட்டத்தின் நடுவே ஓடும் பாதையில் சுமார் 6 கி.மீ தூரம் பயணித்த பிறகு நீர்வீழ்ச்சியை அடையலாம்.

Source : Focus Travel Sri Lanka

தோட்டத்திற்கு அருகிலுள்ள நடைபாதைகள் வழியாக நீர்வீழ்ச்சியை அடைய முடியும் என்பதால் நீங்கள் கவனமாக இருக்க வேண்டும்.

மழைக்காலத்தில் நீங்கள் மஸ்கெலிய பகுதிக்குச் சென்றால், பல அழகான நீர்வீழ்ச்சிகளின் அழகைக் காணலாம், எவ்வளவு அழகாக இருந்தாலும், தெரியாத இடங்களிலிருந்து குளிப்பதைத் தவிர்ப்பது புத்திசாலித்தனம்.



# SKY MEDIA APP

மிக விரைவில்

## 3 சேவைகள்

## ஒரு Application




sky தமிழ் NEWS

Sky Graphics

SKY MEDIA PRODUCTION

www.skymediasl.com

Available on the iPhone App Store

ANDROID APP ON Google play



We are
**Creative**
**Agency**

SKY MEDIA
PRODUCTION
WE ARE CREATIVE ALWAYS








# முஸ்பூர் சிங்க்ஹோல் கத்தாரில்

## அமைந்துள்ள இயற்கை அதிசயங்களில் ஒன்றாகும்



முஸ்பூர் சிங்க்ஹோல் கத்தாரில் அமைந்துள்ள இயற்கை அதிசயங்களில் ஒன்றாகும்.

சுமார் 500000 ஆண்டுகளுக்கு முன் கண்டுபிடிக்கப்பட்டது.

இப் புதைகுழியினுள் நுழையும் போது வெப்பநிலை குறையும். இது இவ் இடத்தின் முக்கிய சிறப்பம்சமாகும்.



ஸ்கை தமிழ் குழுவினர் நேரில் சென்று பார்வையிட்ட போது..








காணொளியை பார்வையிட

CLICK HERE

# மரீனா இல்யாஸ் ஷாபி
## அவர்களுடனான நேர்காணல்



நேர்காணல்
எம். நஸ்றீன் பானு

### உங்களது பூர்வீகம் (பிறப்பிடம்),கல்லூரி வாழ்க்கை பற்றிக் கூறுங்கள்?

நான் மலையகத்தில் தெஹிதெனிய மடிகே என்ற ஊரில் பிறந்தேன். மஸ்தூரா – இல்யாஸ் தம்பதிகளின் புதல்வியாகப் பிறந்து வளர்ந்தேன்.

ஆரம்பக் கல்வியை தெஹிதெனிய முஸ்லிம் மகாவித்தியாலயத்திலும் உயர் கல்வியை மாவனல்ல சாஹிரா கல்லூரியிலும் கற்றேன் .

என் தந்தை சிங்கள மொழி மூலம் கல்வி கற்றவர். என் சகோதரியும் ஆரம்பத்தில் சிங்கள மொழிப் பாடசாலைக்குத்தான் சென்றார்.

வாசிப்புத் துறையில் எனக்கு இருந்த ஆர்வம் காரணமாகத்தான் நான் தமிழ் இலக்கியத்தில் ஈடுபாடு காட்ட ஆரம்பித்தேன்.

நான் ஆரம்பத்திலிருந்து மரீனா இல்யாஸ் என்ற பெயரில் தான் எனது ஆக்கங்களை எழுதி களப்படுத்தி வந்தேன்.

இலங்கை வானொலி முஸ்லிம் நிகழ்ச்சியில் எனது அதிகமான நாடகங்கள் ஒலிபரப்பப்பட்டுள்ளன.





## உங்கள் குடும்பப் பின்னணி பற்றிக் குறிப்பிடுங்கள்?

என் தந்தை மர்ஹூம் இல்யாஸ் அவர்கள் சிங்கள மொழிமூலம் கல்வி கற்றவர். என் தாயார் மஸ்தூரா ஆரம்பக் கல்வியோடு தன் படிப்பை முடித்துகொண்டவர். அவருக்கு ஏழு சகோதரர்கள்.

குடும்பத்தில் பெண் பிள்ளைகள் மிகவும் அரிதாக இருந்ததால் செல்லமாக வளர்க்கப்பட்டேன். என் தாய் மாமனார் என்னை தங்கள் மகளாகவே கவனித்துக் கொண்டனர்.

பிரபல வர்த்தகரும், சமூக சேவையாளருமான என் தாய்மாமன் மர்ஹூம் நயீம் ஹாஜியார் அவர்களின் குடும்பத்தோடு கூட்டுக் குடும்பத்தில் வளர்ந்ததால், அவரின் ஏழு மகன்களும் எனக்கு உடன் பிறந்த ஒரு சகோதரரையும் சேர்த்து மொத்தம் எட்டு சகோதரர்களும் ஒரு சகோதரியுடனும் வளர்ந்தேன்.

இந்தக் கூட்டுக்குடும்ப வாழ்க்கை நான் பெற்ற ஒரு வரம் என்றுதான் சொல்வேன்.

## உங்கள் தொழில் அனுபவங்களைப் பகிர்ந்துகொள்வீர்களா?

வர்த்தக துறையில் ஈடுபட்டிருந்த
என் தாயாரின் குடும்பம், கல்வித் துறையில்
நான் காலூன்ற வேண்டும்
என்று மிகவும் ஊக்கம் கொடுத்தது.

சிறு வயதிலேயே பேச்சாற்றல்
மிக்கவளாகவும் விவாதத் திறன்
மிக்கவளாகவும் இருந்ததால் நான் ஒரு
சட்டத்தரணியாக வரவேண்டும்
என்று குடும்பத்தினர் ஆசைப்பட்டனர்.
ஆனால் சட்டக்கல்வியை ஒரே
ஒரு வருடம்தான் பயின்றேன்.

அப்போது நாட்டில் ஜெ.வி.பி வன்முறைகளால்
ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக
என் கல்வியை தொடர முடியவில்லை.
பல்கலைக்கழக அனுமதி பெற்று
காத்திருந்த வேளையில் ஆங்கில
ஆசிரியைகளுக்கான
போட்டிபரீட்சையில்தேர்வு பெற்று ஆங்கில
ஆசிரியை நியமனம் கிடைத்தது.

பல்கலைக்கழகம் திறக்கப்பட்டதும் தொழில்
செய்துகொண்டே பேராதனைப்
பல்கலைக்கழகத்தில் பட்டப் படிப்பை
முடித்தேன்.

மலேஷியா சர்வதேச இஸ்லாமிய
பல்கலைக்கழகத்தில் முதுமாணிக் கற்கை
முடித்தபின் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில்
விரிவுரையாளராக சிறிது காலம்
கடமையாற்றினேன்.

நியூசிலாந்துக்கு புலம் பெயர்ந்த
பின்பும் மேலும் பட்டப் பின் படிப்புகள்
மேற்கொண்டேன் .
தற்போது கல்வி ஆலோசகராகவும் ,
விரிவுரையாளராகவும், கடமையாற்றுகிறேன் .



# உங்களை ஊடக துறைக்கு வர தூண்டிய விசேட காரணங்கள் யாவை?

சிறு வயதில் இருந்தே வாசிப்புப் பழக்கம் இருந்தது. என் தந்தை மர்ஹூம் இல்யாஸ் அவர்கள் தான் என்னில் வாசிப்புப் பழக்கத்தை விதைத்தவர் நான் விரும்பும் பத்திரிகைகளையும் நூல்களையும் வாங்கித்தந்தார்.

வானொலி, பத்திகைகளில் எனது ஆக்கங்கள் வெளிவந்த போதெல்லாம் பரிசில்கள் வாங்கித்தந்து என்னை உற்சாகப்படுத்தினார்.

பரிசுகள் வழங்குவதில் என் தாய் மாமனாரும் அக்கறை காட்டினார் அதனால்தான், நான் தொடர்ந்தும் எழுதி வந்தேன் .

## எப்போது, எந்த வயதிலிருந்து கலை இலக்கியத் துறையில் பணி செய்ய ஆரம்பித்தீர்கள்? எத்தனை வருடங்களாகச் செய்து வருகின்றீர்கள்?

எனது முதலாவது கட்டுரை, முதல் சிறுகதை, முதல் கவிதை எல்லாமே தினகரனில்தான் வெளியானது .

1980 களின் ஆரம்பத்தில் தினகரன் சிறுவர் பகுதியில் நிறைய எழுதினேன். பின்னர் தினகரன், சிந்தாமணி, நவமணி, மித்திரன், வீரகேசரி போன்ற தேசிய நாளிதழ்களில் எல்லாம் என் ஆக்கங்கள் வெளியாகின. சஞ்சிகைகளிலும் என் படைப்புகள் வெளியாகி உள்ளன.

வானொலியிலும் நிறையவே எழுதினேன். குறிப்பாக முஸ்லிம் நிகழ்ச்சியில்
**”பாறையில் பூத்த மலர் ”** என்ற தொடர் நாடகம்
உட்பட ஏராளமான நாடகங்களை எழுதியுள்ளேன்.

**தற்போது அவுஸ்திரேலியாவில் இருந்து ஒலிபரப்பாகும் வளர்பிறை முஸ்லிம் சஞ்சிகை நிகழ்ச்சியில் அறிவிப்பாளராக இருந்து நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்குகிறேன் .**

நான் முதன் முதலில் குரல் கொடுக்க ஆரம்பித்தது அவுஸ்திரேலியா வானொலி வளர்பிறை முஸ்லிம் நிகழ்ச்சியில்தான். இதற்கான



சந்தர்ப்பத்தை நிகழ்ச்சித் தயாரிப்பாளர் முஹம்மது முஹ்சீன் அவர்கள் எனக்கு வழங்கினார்கள். பின்னர் ஒரே நாடகத்தில் ஒன்றுக்கும் மேற்பட்ட குரலில் பேசி நடித்த அனுபவமும் உண்டு.
நான் இரட்டை வேடமேற்று நடித்த **”பெருநாள் சட்டை ”** என்ற நாடகம் நேயர்கள் மத்தியில்
மிகுந்த பாராட்டைப் பெற்றதால் பலதடவை மறு ஒலிபரப்பு செய்யப்பட்டது ...
**”இலையுதிர் காலம் ”**
என்ற நாடகத்தில். ஓர் இளம் பெண், நடுத்தர வயதுப் பெண், ஒரு மூதாட்டி என்று மூன்று வேடங்களில் நடித்தேன்...

எழுத்தாளர் மர்ஹூம் புன்னியாமீன் அவர்கள் தொகுத்து வெளியிட்ட அரும்புகள், பாலங்கள் ஆகிய இரண்டு தொகுப்புகளிலும் எனது கவிதைகள் சில இடம்பெற்றிருக்கினறன.

அவைகளைத் தவிர, ஆரம்ப காலத்தில் இருந்து நான் எழுதிய கவிதைகளின் பத்திரிகை நறுக்குகள் தொலைந்து விட்டன.

மீதமிருந்த சிலவற்றை சேர்த்து, அண்மைக்கால கவிதைகளுடன் இணைத்து ஒரு கவிதைத் தொகுப்பு வெளியிட்டேன். 2020 இன் இறுதியில் வெள்ளாப்புவெளி மூலம் வெளியிடப்பட்ட **"இரவைக்காக்கும் இமைகள்"** என்ற இந்த தொகுப்பு 30 கவிதைகளைத் தாங்கி வந்திருக்கிறது.


இலங்கையின் மூத்த எழுத்தாளர்களில் ஒருவரான மேமன் கவி அவர்களின் தலைமையில் இணையத்தில் வெளியீட்டு விழா நடந்தது. கொரோனா சூழ்நிலையில் இணையவெளியில் வெளியீட்டு விழா நடாத்தப்பட்ட முதலாவது நூல் இதுவாகும்.


# நீங்கள் எழுதிய கவிதைகள் பற்றி சொல்லுங்கள்?




இணையவெளியில் வெளியீட்டு விழா நடாத்தப்பட்ட முதலாவது நூல் இதுவாகும்.








## நீங்கள் வெளியிட்ட புத்தகம் பற்றி செல்லுங்கள்?

**"குமுறுகின்ற எரிமலைகள் "**
என்ற சிறுகதைத் தொகுப்பும்
**"தென்னிலங்கை முஸ்லிம்களின்
தமிழ்ச் சிறுகதைகள் - ஓர் ஆய்வு "**
நூலும் 1998 ஆம் ஆண்டு
கல்ஹின்னை தமிழ்மன்றம் மூலமாக
வெளியிடப்பட்டன.

**"குமுறுகின்ற எரிமலைகள் "**
சிறுகதைத் தொகுப்பில் எனது ஆரம்பகால சிறுகதைகள் 11
இடம்பெற்றுள்ளன.

## உங்களின் சேவைகளைப் பாராட்டி விருதுகள் கிடைத்துள்ளனவா? அதுபற்றிக் குறிப்பிடுங்கள்?




படிக்கும்போது பாடசாலை மட்டத்திலும், மாவட்ட, மாகாண, தேசிய ரீதியிலும் பல பரிசுகள் வாங்கியுள்ளேன். பல்கலைக்கழக மட்டத்தில் பீடங்களுக்கிடையிலான **இலக்கியப் போட்டிகளிலும் வெற்றியீட்டி உள்ளேன்.**

1999 இல் மத்திய மாகாண முஸ்லிம் கலைஞர் கௌரவிப்பில் **"கலைச்சுடர்" பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டேன்.** அதைத் தொடர்ந்து புலம்பெயர்ந்து வந்து விட்டேன் .



நியூசிலாந்தில் அகதிகளின் கல்வி மேம்பாட்டுக்கு உழைப்பதற்காகவும் அவர்களின் **சமூக நலனில் அக்கறை காட்டுவதற்காகவும் ஆங்கில ஊடகங்கள்** இரண்டு தடவைகள் என்னைப் பேட்டி கண்டு அங்கீகாரமளித்தன.

# பல்வேறு வகையான தலைப்புக்களில் நீங்கள் ஆற்றிய உரைகளை இணைய ஊடகங்களில் காண முடிகிறதே, நீங்கள் ஆற்றிய அந்த உரைகள் பற்றியும் சொல்லலாமே?

நான் ஓர் உற்சாகமூட்டும் பேச்சாளர் **(Motivational Speaker)**.
பல பொது வைபவங்களில் பேசுவதற்கு எனக்கு அழைப்புகள் வரும்.

உலக சமாதான தினம், மத நல்லிணக்க நிகழ்வுகள், இளைஞர் யுவதிகளுக்கான கருத்தரங்குகள், மகளிர் நிகழ்ச்சிகள், பெற்றோருக்கான வழிகாட்டல் நிகழ்ச்சிகள் என்பன இதில் அடங்கும் .

2019 ஆம் ஆண்டில் நியூசிலாந்து கிறிஸ்டசர்ச் பள்ளிவாசல் படுகொலைத் தாக்குதல் தொடர்பான நிகழ்வொன்றில் பாராளுமன்ற உறுப்பினர்கள், ஒக்கலன்ட் நகர பிதா, சமய நல்லிணக்கத் தலைவர்கள் மத்தியில் நான் ஆற்றிய உரை மிகவும் பிரபலமானது.

இது சமூக வலைத்தளங்களில் மீண்டும் மீண்டும் பகிரப்பட்டது. இணையவழி பத்திரிகைகளும் இதைப் பிரசுரித்தன அது தவிர, உள்நாட்டு, வெளிநாட்டு கல்விக்கருத்தரங்குகளிலும் கலந்து கொண்டுள்ளேன்.

நான் சமர்ப்பித்த ஆய்வுக்கட்டுரைகள் பல ஆங்கில மொழிமூலம் வெளியாகி உள்ளன.



# உங்கள் வாழ்வில் மறக்க முடியாத சம்பவம் ஒன்றைக் குறிப்பிடுங்கள்?



மறக்க முடியாத சம்பவங்கள் ஆயிரம் இருக்கின்றன.
மறக்க முடியாத ஆனால், மறக்கத் துடிக்கின்ற ஒரேயொரு சம்பவம் இருக்கிறது.

அதுதான் **நான் சந்தித்த கார் விபத்து.** 2000ஆம் ஆண்டில் கணவரோடு புலம் பெயர்ந்த பின்பு அங்கு பெரியதோர் வாகன விபத்தில் சிக்கி கால், கை, கழுத்து, முதுகு, என்று என்று உடலின் பல பகுதிகள் முறிந்து சிதைந்து போனதால், சில வருடங்கள் சக்கர நாட்காலியிலேயே வாழ்க்கை கழிந்தது. பின்னர் ஊன்றுகோலின் துணையுடன் நடந்தேன்.

இந்த சந்தர்ப்பத்திலேயே பட்டப்பின் படிப்பிலும், உளவியல், ஆத்மீகம் போன்றவற்றிலும் கவனம் செலுத்தினேன்.

விடா முயற்சி, தன்னம்பிக்கை, தொழுகை, தொடர் பிரார்த்தனை இறைவன் மீதுகொண்ட அசைக்க முடியாத நம்பிக்கைதான் என்னை மீண்டும் எழுந்து நடக்க வைத்தது.

இதன் பிறகே நான் உற்சாகமூட்டும் பேச்சாளராக உருவெடுத்தேன் .

### இந்த நேர்காணலூடாக விசேடமாகக் கூற விரும்பும் செய்தி என்ன?

சமூக வலைத்தளங்களில் இப்போது நிறையப்பேர் எழுதுகிறார்கள். சிலர் இந்த இலவச ஊடகங்களை சிறந்த முறையில் பயன்படுத்துகிறார்கள் .

ஆனால், பலர் இதை அவதூறு பரப்பும் இடமாவும்,பெண்களோடு அரட்டை அடிக்கும் இடமாகவும், அடுத்தவர்களின் அந்தரங்கத்தை அரங்கேற்றும் இடமாகவும் ஆக்கி வருகின்றனர்.

நாங்கள் பேசும் / எழுதும் ஒவ்வொரு வார்த்தைக்கும் நாங்களே பொறுப்புதாரிகள். இதுகுறித்து மறுமையில் விசாரணை செய்யப்படுவோம் என்பதை நினைவூட்ட விரும்புகிறேன்.

## எங்கள் எழுத்துக்களை நல்ல நோக்கத்துக்காக பயன்படுத்துவோம்.



### உங்களது படைப்புகளுக்கு கிடைத்த வரவேற்புகள் பற்றி கூறுங்கள்?

தனிப்பட்ட முறையில் அறிமுகமானவர்களுக்கு பட்டமும் பாராட்டும் வழங்கும் ஒரு அணுகுமுறை இலங்கையில் இருப்பதை நான் அறிவேன். அப்படிப்பட்ட அணுகுமுறை என் கொள்கைக்குப் புறம்பானது. ஆனால் தனிப்பட்ட முறையில் வாசகர்களிடமிருந்தும் நேயர்களிடமிருந்தும் கிடைக்கும் பாராட்டுக்களையும் விமர்சனங்களையும் பெரிதும் மதிக்கிறேன்.

### மூத்த எழுத்தாளர்களுக்கும், இளம் எழுத்தாளர்களுக்கும் பொதுவாக என்ன கூற விரும்புகின்றீர்கள்?


நல்ல படைப்புக்களைப் பாராட்டி தட்டிக்கொடுக்கும் பழக்கத்தை உருவாக்கிக்கொள்ளுங்கள். அதுவே ஆரோக்கியமான இலக்கிய உலகத்தை உருவாக்க உதவும்!!!

# இறுதியாக என்ன சொல்ல விரும்புகின்றீர்கள்?

கட்டாரில் இருந்து ஸ்கை தமிழ் நல்ல பல நிகழ்ச்சிகளை தயாரித்து வழங்கி வருகிறது.

அதில் சகோதரி நுஸைலா பதுர்தீன் தொகுத்து வழங்கும் துணிந்தெழு நிகழ்ச்சியில் ஆளுமைகளை அடையாளம் கண்டு, அவர்களின் சிறந்த சேவைகளை பற்றி பேசி எல்லோரும் பயனடையச் செய்கிறார்.

இப்போது அதே நிகழ்ச்சியை இணையதளத்தில் சஞ்சிகையாக வெளியிடும் முயற்சியில் இறங்கியிருக்கும் ஸ்கை தமிழின் பணிப்பளார் சகோதரர் ஜெ.எம். பாஸித் மற்றும் சஞ்சிகை குழுவிற்கு என் வாழ்த்துக்களும் பிரார்த்தனைகளும்.



# புகைப்படங்கள் சில...


NAVAMANI 01-10-2000
கவிதா மணிகள்
சரித்திர நாயகன்


நவமணி 27-02-2000

















click here to watch now!

**Nuzaila Badurdeen** தொகுத்து வழங்கும் துணிந்தெழு
“வரலாறு படைக்க இருக்கும் வைர மங்கையர்” புகழ்பூத்த மூத்த பெண் ஆளுமை
**Furkhan bee ifthikar (MA)** சிரேஷ்ட ஊடகவியலாளர், எழுத்தாளர்
அவர்களுடனான மனம்திறந்த உரையாடல்.









click here to watch now!

# Omer Embroidery & Garment

**உங்கள் கடைகள்,அரச மற்றும் தனியார் பாடசாலைகள்,**
**நிறுவனங்கள், கழகங்களுக்கு திறன்பட நியாயமான கட்டணங்களில்**
Embroidery **செய்து கொள்ள இன்றே அழையுங்கள்.**
**எம்மிடம்** Tshirts > Shirts> Bags> Tie **இன்னும் பல**
**முறையாக தைத்து** Embroidery **செய்து பெற்றுக்கொள்ளலாம்.**











Embroidery Your Personalised T-shirt
Promote Your Product, business, Brand with Everyone.
Contact for more details

**0772446754 | 0750732549**

sky தமிழ் NEWS
துணிந்தெழு

2021
Feb 15




YouTube LIVE

Sky தமிழ் - இணைந்திடுங்கள்!

# துணிந்தெழு இதழில் உங்கள் விளம்பரங்களைப் பிரசுரிக்க

## தொடர்புகளுக்கு

+94 77 639 11 88 | +94 77 247 1464 | +94 71 743 7867


துணிந்தெழு
இதழ்களை
Whatsapp
மூலம்
பெற்றுக்கொள்ள
CLICK HERE


Riza Mehandi
Professional henna artist
Mehandi Art for all Occasion
(Bridal / Non Bridal)
Natural henna cones
& Organic Henna
Products supplier
Mehandi Classes
Available
0767732743
Riza Mehandi
@hennaby_riza


College Of
DIGIMIND
Preschool
ADMISSION
Now Open For Registration!
"your kids Deserve
The Best Education"
Further Information
077 50 23 223
College of Digimind
11A, Jummah mosque road, Nintavur 17


WHITE ROSE
BEAUTY PARLOUR
Mrs.MAF.Siyara Safrin
(Dip. Bridal & Beauty Care)
அனைத்து சரும
பிரச்சனைகளுக்குமான
தீர்வு, மணப்பெண்
அலங்காரம் மற்றும்
அனைத்து வகையான
பேசியல் செய்யப்படும்
கிறீம் வகைகளும்
உத்தரவாதத்துடன்
இங்கே கிடைக்கும்
(Ladies only)
@WhiteRose Beauty Parlour
0771491470 / 0754141704
94/D, வைத்தியசாலை வீதி, நிந்தவூர் -03


Stylish
ஸ்டைலிஸ்
Beauty Parlour
077 8778659, 075 7522667
No-185, Main Street, Addalaichenai - 14


Center for Psychology
& Counseling - Sri Lanka
centerforcounseling
0761619184
centerforcounseling123@gmail.com